கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: காடு என்ற பெயரால் நிறைய நிலங்கள் அந்த கடற்கரைப் பகுதியில் இருக்கின்றன. ஆடு, மாடுகள் கூட போகமுடியாத நிலையில் அவைகளை பட்டியில் அடைத்து விடுகிறார்கள். இந்த நிலங்களை விவசாயத்திற்கு கொடுக்காவிட்டாலும் ஆடு, மாடுகளை ஓட்டவாவது, அவைகளைப் பட்டியில் அடைக்காமல் இருக்கவாவது, அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் சவுக்கு மரங்களும், யூகலிப்டஸ் ஹை ப்ரீட் மரங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து ஆண்டுகள் கழித்து ஆடு, மாடுகளை மேய விடுவார்கள் ; அதற்கு ஆட்சேபம் இருக்காது.

கரி உற்பத்திக்கு மரம் வெட்டல்

* 134 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குற்றாலத்திலுள்ள தெற்கு மலை எஸ்டேட்டில் மரங்களை வெட்டி, எரித்து, கரிக்காக (coal) புதைக்கப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:

(அ), & (இ) தெற்குமலை எஸ்டேட்டில் 15 ஏக்கர் பரப்பில் இருந்த மரங்களை அறவெட்டு முறையில் (clear felling system) வெட்டி எடுத்துக் கொள்ள அந்த எஸ்டேட்டின் சொந்தக்காரருக்குத் திருநெல்வேலி கலெக்டர் 1964, பிப்ரவரியில் அனுமதி வழங்கினார். அனுமதி வழங்கப்பட்ட நிலத்தில் இருந்த மரங்களை எஸ்டேட் உரிமையாளர் அறவெட்டு முறையில் வெட்டி எடுத்துக் கொண்டார். அந்த எஸ்டேட்டிலிருந்து எடுத்துச் செல்ல முடியாத கரடுமுரடான மரத்திம்மைகள், மொக்கையான அடிக்கட்டைகள், விறகு ஆகியவை, மரங்களை அறுத்து எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்ட பகுதிக்குள்ளேயே சுட்டுக் கரியாக்கப்பட்டன. மரங்களை அறுத்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட 15 ஏக்கர் பரப்புக்கு வெளியே எவ்விடத்திலும் கரி சுடப்படவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: இந்த குற்றாலம் மலை மேல் உள்ள மரங்களை வெட்டியதால் மழை வீஸனில் மழை பெய்யாமல் குற்றாலத்தின் மகிமையே கெட்டு விட்டது என்று அந்தப் பிராந்தியத்தில் சொல்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது அங்கு மரங்களை வெட்டி கரி எடுப்பதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: குற்றாலத்திலே மேலே உள்ள மரங்களை எல்லாம் வெட்டி விட்டார்கள் என்பது சரியல்ல. நான் கொடுத்துள்ள தகவல்படி 15 ஏக்கர்களில் வெட்டிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அப்படிக் கொடுக்கப்பட்டதில் அதை வெட்டி எடுத்து கொஞ்சம் கரி சுட ஏற்பாடு செய்து விட்டார்கள். ஆனால், இப்போது கரி சுடுவதற்குக்கூட அனுமதி வேண்டுமென்ற ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆக கரி சுடுவது என்று சொன்னாலும் கூட அவர்கள் அந்த அனுமதி இல்லாமல் செய்ய முடியாத ஒரு நிலையில் அமெண்ட்மெண்ட் ஒன்று கொண்டு வரப்பட இருக்கிறது. அது அநேகமாக கூடிய சீக்கிரத்தில் வந்து விடும்.

திரு. சா. கணேசன்: இதேமாதிரி குற்றாலம் போன்ற மலைப் பிராந்தியங்களில் உள்ள மரங்களை—நீலகிரியில் எல்லாம் அனுமதி கொடுக்கப்பட்டு முழுக்க வெட்டப்பட்டு விட்டன—அதேமாதிரி குற்றாலத்திலும் தொடங்கப்பட்டிருக்கிறது. முழுக்க போய் விட்டது என்று சொல்ல முடியாவிட்டாலும் கூட தெற்கு மலைப் பகுதியில் சில பகுதிகள் தனிப்பட்டவர்களுக்கும்

28th February 1966]

சில பகுதிகள் அரசாங்கத்தின் உடைமைக்கும் உரியதாக இருப்பதினுல் தனிப்பட்டவர்களுடைய இடமாக இருந்தாலும் சரி, அரசாங்கப் பொறுப்பில் உள்ள பகுதிகளாக இருந்தாலும் சரி, இனிமேல், தற்செயலாக விழுந்த மரங்களை வெட்டுவது அன்றி, கரிக்காக அல்லது விறகுக்காக என்று வெட்டக் கூடாது என்று நிரந்தரமாக தடை உத்தரவு ஒன்று போட அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மலைப் பிராந்தியங்களில் மரங்களை வெட்டுவது என்றால் அரசாங்கத்தினுடைய அனுமதி இன்றி வெட்டக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் கண்டிப்பாக அமல் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் குற்றாலத்திலே கூட சில மரங்களை முதிர்ச்சி அடைந்த பிறகு அவற்றை வெட்டி விட்டு மீண்டும் செடிகள் வைக்க வேண்டியிருக்கிறது. விறகும் தேவையாக இருக்கிறது. விறகுக்கு என்று மரங்களை வைத்தால் அவை முதிர்ச்சி அடைந்த பிறகு வெட்டி விட்டு வேறு மரங்களை வைக்கவேண்டியிருக்கிறது. குற்றாலத்தைப் பொறுத்தவரை சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. நீர் வீழ்ச்சியில் வருகிற அருவித் தண்ணீர் மருத்துவத் தன்மை உடையதாக இருக்கிறது. அந்த மருத்துவத் தன்மை அங்குள்ள மரங்கள், செடிகள் அவற்றின் மூலம் வருவதால் ஏற்படக் கூடியது என்ற எண்ணத்தோடு அந்த மெயின் ஃபால்ஸின் மேலே உள்ள மரங்களை, ஐந்தருவிக்கு மேலே உள்ள மரங்களை வெட்டவே கூடாது என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, while felling these trees, generally tamarind trees are being cut and sold for the purpose of making charcoal. So, will the Government consider the desirability of issuing instructions to Collectors to see that the tamarind trees are not cut ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : மரங்களை வெட்டுவதற்கு கூப்புகள் கொடுத்தாலும்கூட புளிய மரங்களை வெட்டக் கூடாது என்பது விதி. ஆகவே, புளிய மரங்கள் வெட்டப்படுவதில்லை.

ஆசிரியர்களை மாற்றுதல்

* 135 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர்கள் மாற்றம் சம்பந்தமாக ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி பிறப்பித்தக் கட்டளையை மீறி வடாற்காடு மாவட்டம், அரக்கோணம் பஞ்சாயத்து தலைவரிடமிருந்து அண்மையில் அரசாங்கத்திற்கு மனு ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களை மாற்றுவது போன்ற காரியங்களில் அந்த அதிகாரம் யாரிடம் இருக்கிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : யூனியன் அடிப்படையில் அட்ஹாக் கமிட்டி ஒன்று இருக்கிறது. வருட ஆரம்பத்தில் அவர்கள் எல்லாம் கூடி நியாயமான அளவில் செய்யக் கூடிய டிரான்ஸ்பர்களைப் பற்றி முடிவு எடுத்துக் கொள்ளலாம்.

புலவர் கா. கோவிந்தன் : இந்த அட்ஹாக் கமிட்டி பொதுவாக ஏப்ரல் மாதத்தில் ஆண்டுக்கு ஒரு முறை கூடவேண்டுமென்று விதி வந்திருக்கிறது. அந்த கமிட்டி செய்த முடிவு தவறானது என்று அந்தக் கமிட்டியில் இருக்கிறவர்கள் உணர்ந்தால் மீண்டும் கூடி அந்த முடிவை மாற்ற விதிகளில் இடமிருக்கிறதா ?